DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW 11 |
| Name | : | Dr.ராஜ்குமார் |
| Father's Name | : | Mr.Gopal |
| Village | : | Poonapalli |
| Taluk | : | Hosur |
| District | : | Krishnagiri |
| Profession | : | Doctor |
| Age | : | 46 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 21st day of May 2026.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் எதிரி ஆஜரில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :—</u>

நான் தற்போது கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 15.07.2022 அன்று மாலை 03.40 மணியளவில் பணியில் இருந்த போது கந்திகுப்பம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை முதல் நிலை காவலர் 1573 திரு.சரவணன் என்பவர் என்னிடம் கொடுத்தார். அந்த வேண்டுகோள் கடிதத்தில் முனிராஜ் வயது 36, த/பெ.முனிசாமி என்ற பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்து அறிக்கை

அளிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதனை பெற்று மாலை 03.40 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். பிரேதத்தின் இரு கைகளில் மட்டும் பிணவிரைப்பு தன்மை காணப்பட்டது. பிரேத்தின் மீது காணப்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. இடது முன் தலையில் 5X4செ.மீ. , 6 X 3 cm அளவிலும் வலது முன் தலையில் 5X4செ.மீ அளவிலும், மூக்கின் மீது 2 x1 cm அளவிலும், இடது கையில் 1x1 cm, 2x2 cm அளவிலும் , வலது புஜத்தில் 8 x 6 cm அளவிலும் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

2. வலது தொடை மற்றும் கால் மூட்டு பகுதியில் 57x30x2 cm அளவிலும், இடது தொடை மற்றும் கால் மூட்டு பகுதியில் 40x25x2 cm அளவிலும், கீழ் வயிற்று பகுதியில் 20x18x1 cm அளவிலும், வலது மழுங்கைளில் 15x10x3 cm அளிவலும், இடது கால் பாதத்தில் 10x6 cm அளவிலும், வலது பாதத்தில் 8x6x1 cm அளவிலும் கிழிந்த காயங்கள் காணப்பட்டன.

3. இடது பாதத்தில் உள்ள எலும்புகள் உடைந்து காணப்பட்டன.

4. இடது பக்க இடுப்பு எலும்பு மற்றும் இடது தொடை எலும்பு உடைந்து காணப்பட்டன.

5. நெஞ்சு எலும்பு , வலதுபுற 2 முதல் 8 விலாஎலும்புகள் உடைந்து காணப்பட்டன.

6. நெஞ்சின் இருபுறங்களிலும் 300 மில்லி அளவு ரத்தம் காணப்பட்டது. இரு நுரையீரல்களும் கிழிந்து காணப்பட்டது.

7. வயிற்றின் உட்பகுதியில் 1500 மில்லி அளவு ரத்தம் காணப்பட்டது. கல்லீரல் மற்றும் மண்ணீரல் கிழிந்து காணப்பட்டன.

8. இடதுபுற பக்கவாட்டு தலையில் 6x4 cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. கபால எலும்புகள் மற்றும் மூளை சிராக இருந்தன.

பிரேதத்தின் வயிற்று 20 மில்லி கிராம் brown நிற திரவம் எந்தவித நெடியும் இன்றி காணப்பட்டது. உள்ளுருப்புகள் அனைத்தும்

வெளிரி காணப்பட்டது. பிரேத பரிசோதனையின் முடிவில் இறப்பானது அவருக்கு ஏற்பட்ட பல்வேறு காயங்களால் உண்டான ரத்தபோக்கினாலும், அதிர்ச்சினாலும் நிகழ்ந்திருக்ககூடும் என்றும் இறப்பானது பிரேத பரிசோதனைக்கு 6 முதல் 12 மணிநேரத்திற்கு முன்பாக நிகழ்ந்திருக்கலாம் என்று குறிப்பிட்டு நான் கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

இல்லை.

மறு விசாரணை :–

இல்லை.

M SANTHI

Digitally signed by M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.